DINAMANI

25 MAR 2022

PAGE 2

# புதுவை பல்கலை.யில் தொலைநிலைக் கல்வி சேர்க்கை: மார்ச் 31-இல் நிறைவு

**புதுச்சேரி, மார்ச் 24:** புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்விக்கான மாணவர்கள் சேர்க்கைக்கான அவகாசம் மார்ச் 31-ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது.

இதுகுறித்து அதன் உதவிப் பதிவாளர் மகேஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில், ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்க்கை ஜனவரி மாதத்தில் தொடங்கி நடைபெறும். இதனிடையே, கரோனா தொற்று பரவல் காரணமாக, நிகழாண்டு மாணவர்கள் சேர்க்கை கடந்த மார்ச்-1ஆம் தேதி தொடங்கியது. மார்ச் 31-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது என்று அவர் கூறினார்.